**<u>In the court of the Additional Subordinate Judge, Tenkasi.</u>**

<u>Deposition of Witness</u>

Mcop 280/2023

ம.சா2 மருத்துவர் திருமலைக்குமார்

| | |
|---|---|
| Name | : திருமலைக்குமார் |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | :6.11.2025 |

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை

நான் தற்போது தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. நான் கடந்த 15.12.22 அன்று அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தேன். அப்போது 67 வயது மதிக்கதக்க திருமலை வேலு, த/பெ. அருணாசலம் என்பவர் என்னிடம் சிகிச்சைக்காக வந்தார். அவர் என்னிடம் தான் நடந்து சென்று கொண்டிருந்தபோது நான்குசக்கர வாகனம் இடித்து விட்டதாக கூறினார். அவரை பரிசோதனை செய்தபோது மண்டைஓட்டின் இடதுபுறதத்தில் இருந்து ரத்தகசிவு இருந்தது வந்தது. 3x 2 x2 செமீ அளவுள்ள வெட்டுக்காயம் அவரது இடதுபக்கம் பரைட்டல் எரியாவில் இருந்தது. இடது தோள்பட்டையில் 1x 1 செமீ அளவுள்ள சிராய்ப்பு காயம் காணப்பட்டது. அவரை நான் உள்நோயாளியாக அனுமதித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என 7.2.23 ம் தேதி சான்று

வழங்கினேன். அவருக்கு தலையில் ஏற்பட்ட காயங்களுக்காக பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது. அவர் உள்நோளியாக 7 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். அந்த நபருக்கு சிகிச்சையளித்த நபர்கள் வேறு மருத்துவர்கள் ஆவார்கள். ஒவ்வொரு நாளும் என்ன சிகிச்சை எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. அந்தெந்த மருத்துவர்களுக்கு தான் தெரியும். நான் அவசர சிகிச்சை பிரிவில் அந்த நபருக்கு அனுமதி மட்டும் தான் கொடுத்தேன். நான் விடுவிக்கவில்லை.

(ஒம்)எஸ்.முருகவேல்
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.